THE HINDU 31 JAN 2025

# Establishments asked to grant holiday on polling day in Erode

The Hindu Bureau
ERODE

**The Labour Department has urged workers to report any violations**

The Labour Department has directed all commercial establishments and other organisations to declare a holiday with paid leave for workers on polling day for the Erode (East) Assembly constituency byelection on February 5.

Additionally, it has urged workers to report any violations to the Department.

A release from K. Jeyalakshmi, Assistant Commissioner of Labour (Enforcement) said that voters in the constituency who are employed in organisations across the district should be granted a paid holiday on polling day. This applies to workers in commercial establishments, the hotel and transport industry, public and private organisations, Information Technology companies and others sectors.

Violations can be reported to K. Jeyalakshmi at 94453-98751 and 0424-2270090, the release added.

**284 micro-obervers**

A total of 284 micro observers, including 47 reserves, will monitor the polling in all the 237 polling stations for the byelection.


District Election Officer and Collector Raja Gopal Sunkara in the presence of General Observer Ajay Kumar Guptaand Returning Officer and Corporation Commissioner H.S. Srikanth, carried out the first level randomisation for micro observers in the portal of the Election Commission of India on Thursday.

They were drawn from LIC, railways, nationalised banks and other Central Government Departments.

The micro observers are responsible for observing the overall election process in the stations on polling day.

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS 31 JAN 2025



# POLL-ICE IN ACTION

CRPF personnel deployed in front of the Erode Corporation office ahead of the bypoll in Erode East constituency | EXPRESS

Scanned with OKEN Scanner

இந்து தமிழ்

3 1 JAN 2025

# ஈரோடு கிழக்கில் கூடுதல் துணை ராணுவப்படை பாதுகாப்பு

## வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி தீவிரம்

ஈரோடு

ஈரோடு இடைத்தேர்தல் பாதுகாப்பு பணிக்காக கூடுதலாக துணை ராணுவப்படையினர் வரவழைக்கப்பட உள்ளனர், என போலீஸார் தெரிவித்தனர்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இத்தேர்தலில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு கூடுதல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இடைத்தேர்தல் வாக்குப்பதிவு தினத்தன்று சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தடுக்க போலீஸார் அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது.

இதுகுறித்து போலீஸார் கூறியதாவது:

ஈரோடு இடைத்தேர்தல் நடக்கும் 237 வாக்குச் சாவடிகளிலும், ஒரு துணைராணுவ வீரர் துப்பாக்கிஏந்தி பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார். பதற்றமான வாக்குச்சாவடியில் ஒரு இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட உள்ளது.

வாக்குச்சாவடி எல்லையான 100 மீட்டரில் ஒரு எஸ்.ஐ தலைமையில் போலீஸாரும், 200 மீட்டர் தூரத்தில் ஒரு எஸ்.ஐ. தலைமையில் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர்.

### துணை ராணுவப்படை

வாக்குப்பதிவு நாளன்று சட்டம், ஒழுங்கு பிரச்சினையை எதிர்கொள்ளும் வகையில், அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது. இவர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டு, பாதுகாப்பை உறுதி செய்வர். ஈரோடு கிழக்கில் பாதுகாப்பு பணிக்காக இதுவரை 3 பிரிவு துணை ராணுவத்தினர் வந்துள்ள நிலையில், வாக்குப்பதிவுக்கு முன்பாக கூடுதலாக துணை ராணுவப்பிரிவினர் வரவுள்ளனர். ஈரோடு கிழக்கு தேர்தலை ஒட்டி 12 இடங்களில் தற்காலிக சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு சோதனை நடந்து வருகிறது, என்றனர்.




ஈரோடு கிழக்கு தொகுதியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தை ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான ராஜகோபால் சுன்கரா தொடங்கி வைத்தார்.

### பூத் சிலிப் விநியோகம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவுக்காக தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடந்தது.

ஈரோடு கிழக்கு வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று பூத் சிலிப் வழங்கும் பணி கடந்த 26-ம் தேதி முதல் நடந்து வருகிறது. இதுவரை 1.76 லட்சம் பேருக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அதிகாரிகள், அடுத்த இரு நாட்களில் அனைத்து வாக்காளர்களுக்கும் பூத் சிலிப் வழங்கும் பணி நிறைவடையும் என தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Additional Paramilitary Security arranged.
Distribution of booth slips intensified.
SVEEP ACTIVITY : To emphasis 100% Polling turn out.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 3 1 JAN 2025

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் 4 நாளுக்கு டாஸ்மாக் விடுமுறை

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இதையொட்டி, பிப்ரவரி 3-ம் தேதி காலை 10 மணி முதல், வாக்குப்பதிவு நடைபெறும் 5-ம் தேதி நள்ளிரவு 12 மணி வரை மதுபானக் கடைகள் மூடப்படும். அதேபோல், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 8-ம் தேதியும் மது விற்பனை தடை செய்யப்படுகிறது.

இந்த நாட்களில் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் கடைகள், பார்கள் மற்றும் மது விற்பனை செய்யும் கேளிக்கை விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டு இருக்கும். தடை செய்யப்பட்ட நாட்களில் மதுபான விற்பனையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ராஜகோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
4 days holiday for TASMAC shops.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 31 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதி

# இடைத்தேர்தலுக்காக புதிய வாக்காளர் பட்டியல் வெளியீடு

## 1,113 பேர் கூடுதலாக உள்ளனர்

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதி. இடைத்தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள புதிய வாக்காளர் பட்டியலில் 1,113 பேர் கூடுதலாக உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல்

தமிழ்நாடு முழுவதும் இறுதி வாக்காளர் பட்டியல் கடந்த 7-ந் தேதி வெளியிடப்பட்டது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, பவானி, அந்தியூர், கோபி, பவானிசாகர் ஆகிய 8 தொகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 19 லட்சத்து 77 ஆயிரத்து 419 வாக்காளர்கள் உள்ளனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 636 ஆண்கள், 1 லட்சத்து 16 ஆயிரத்து 760 பெண்கள், 37 மூன்றாம் பாலினத்தவர் என 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 வாக்காளர்கள் இருந்தனர்.

### 1,113 பேர்

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு வருகிற 5-ந் தேதி தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்களிக்கும் வகையில் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுடன் கூடிய புதிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். புதிய பட்டியலின் படி 1,113 பேர் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் பழைய பட்டியலை விட கூடுதலாக ஆண் வாக்காளர்கள் 492 பேரும், பெண் வாக்காளர்கள் 621 பேரும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த புதிய பட்டியலின் படி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. எனவே வாக்காளர்கள் தங்கள் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதா? என சரிபார்த்துக்கொள்ள அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
New Electoral Roll released.
1,113 additional voters have been included.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025



ஈரோட்டில் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த பணத்தை தேர்தல் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்த போது எடுத்தபடம்.

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# கட்டிட ஒப்பந்ததாரர் உள்பட 3 பேரிடம் ரூ.9 லட்சம் பறிமுதல்

## பறக்கும் படை சோதனையில் பிடிபட்டது

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதியில் கட்டிட ஒப்பந்ததாரர் உள்பட 3 பேரிடம் ரூ.9 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

### பணம் பட்டுவாடா

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு கடந்த 7-ந்தேதி முதல் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வது, பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த சோதனைக்குழுவினர் வாகனங்களை சோதனையிட்டு, ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்றால் பறிமுதல் செய்து வருகிறார்கள்.

### பறக்கும் படை

அதன்படி நேற்று அதிகாலை 2 மணிக்கு பறக்கும் படை அதிகாரி முருகானந்தம் தலைமையில் ஈரோடு ஈஸ்வரன் கோவில் வீதி பகுதியில் பறக்கும் படையினர் ரோந்து சுற்றி வந்தனர்.

**Erode East Assembly Constituency By-election.**
**Flying squad seized the amount of Rs.9 Lakhs without proper documents from 3 persons including a building contractor.**

அந்த பணத்தை பறிமுதல் செய்து மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர்.

### ஒப்பந்ததாரர்

இதேபோல் நேற்று காலை 6 மணி அளவில் ஈரோடு பி.பி. அக்ரகாரம் பகுதியில் நிலை கண்காணிப்பு குழுவினர் அதிகாரி தனபிரனேஷ் தலைமையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு வந்த ஒரு காரில் ரூ.2 லட்சத்து 85 ஆயிரம் ரொக்கப்பணம் இருந்தது. அதற்கான ஆவணங்கள் இல்லை.

அதிகாரிகள் நடத்திய விசாரணையில் காரில் வந்தவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளப்பட்டி ஷா நகர் கிழக்கு பகுதியை சேர்ந்த முகமது சுகைல் என்பதும், கட்டிட ஒப்பந்ததாரர் என்பதும் தெரியவந்தது. அவரிடமிருந்து பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலகத்துக்கு கொண்டு சென்றனர்.

### ரூ.9 லட்சம்

ஈரோடு சம்பத் நகர் பகுதியில் பறக்கும் படையினர் அதிகாரி சண்முகம் தலைமையில் வாகன சோதனை நடத்தினர். அப்போது அங்கு வந்த ஒரு காரில் ரூ.4 லட்சத்து 99 ஆயிரத்து 500 இருந்தது. ஆவணங்கள் இல்லாததால் அதிகாரிகள் பணத்தை பறிமுதல் செய்தனர். காரை ஓட்டி வந்தவர் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் ஆனங்கூரை சேர்ந்த தினேஷ்குமார் என்பது தெரியவந்தது.

இவ்வாறு நேற்று 3 பேரிடம் ரூ.9 லட்சத்து 4 ஆயிரத்து 500 பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை ரூ.1 லட்சம் மதிப்புள்ள ஜவுளி பொருட்கள் உள்பட ரூ.43 லட்சத்து 53 ஆயிரத்து 560 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தவர்களிடம் ரூ.26 லட்சத்து 52 ஆயிரத்து 560 திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# வாக்குப்பதிவு அன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும்

## தொழிலாளர் உதவி ஆணையாளர் உத்தரவு

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவு அன்று தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று தொழிலாளர் உதவி ஆணையாளர் ஜெயலட்சுமி தெரிவித்து உள்ளார்.

### சம்பளத்துடன் கூடிய விடுமுறை

இது குறித்து ஈரோடு மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதையொட்டி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்ய ஏதுவாக மக்கள் பிரதிநிதித்துவ சட்ட பிரிவின் கீழ் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள அனைத்து பணியாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டத்தில் இயங்கும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள தினக்கூலி, தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்பட அனைத்து பணியாளர்களும் தேர்தல் தினத்தன்று வாக்குரிமையை செலுத்திட சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும்.

### தேர்தல் கட்டுப்பாட்டு அறை

சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்காத தொழில் நிறுவனங்கள் மீதான புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையின் கீழ் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு உள்ளது. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய தொழில் நிறுவனங்களில் விடுமுறை அளித்தல் தொடர்பான புகார்கள் இருந்தால் தெரிவிக்கலாம்.

அதன்படி ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி (9445398751), தொழிலாளர் துணை ஆய்வாளர் முதல் சரகம் மனோரஞ்சிதம் (7708102209) தொழிலாளர் துணை ஆய்வாளர் 2-ம் சரகம் மயில்வாகன் (9840456912), தொழிலாளர் உதவி ஆய்வாளர் முதல் சரகம் யுவராஜ் (9543826001), தொழிலாளர் உதவி ஆய்வாளர் 2-ம் சரகம் பெரோஸ் அகமது (9965634839), தொழிலாளர் உதவி ஆய்வாளர் 3-ம் சரகம் சுகந்தி (9442400223) மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் 4-ம் சரகம் ராஜ்குமார் (9698215097) ஆகியோர்களை தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Holiday with salary to be given on Polling day. Assistant Labour Commissioner orders.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 31 JAN 2025

### மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில்

## வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணி நிறைவு



ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஒரு மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் 16 வேட்பாளர் பெயர், சின்னம் மட்டும் பொருத்த முடியும் என்பதால் ஒவ்வொரு வர்க்குச்சாவடியிலும் தலா 3 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள 237 வாக்குச்சாவடிகள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் சேர்த்து, 852 வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு எந்திரங்கள், 308 வி.வி. பேட் எந்திரங்கள் ஆகியவை தேர்தலில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த எந்திரங்கள் அனைத்தும் ஈரோடு மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அங்கிருந்து எடுக்கப்பட்டு, மாநகராட்சி கூட்டரங்கிற்கு கொண்டு வரப்பட்டு, வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி தொடங்கியது. 46 வேட்பாளர்கள், ஒரு நோட்டோ என 47 இடங்களில் பொத்தானை அழுத்தும் வகையிலும், 48-வது இடத்தில் உள்ள பொத்தானை அழுத்த முடியாதபடியும் அமைத்துள்ளனர். நேற்று இரவில் அனைத்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களிலும் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தப்பட்டு பூட்டி 'சீல்' வைக்கப்பட்டது. பின்னர் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள் முன்னிலையில், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மீண்டும் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டு, பூட்டி 'சீல்' வைக்கப்பட்டன.

Fixing of Symbols and Candidates' name in EVMs ended.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

3 1 JAN 2025

இடைத்தேர்தலில் ஓட்டுபோடும் வாக்காளர்களுக்கு

# பூத் சிலிப் வழங்கும் பணி இன்று நிறைவடைகிறது

## 1 லட்சத்து 44 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

ஈரோடு, ஜன.31-

இடைத்தேர்தலில் ஓட்டுப் போடும் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி, இன்று (வெள்ளிக்கிழமை) நிறைவடைகிறது. இதுவரை 1 லட்சத்து 44 ஆயிரம் பேருக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது.

### பூத் சிலிப்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு தேர்தல் நடத்துவதற்கான பணிகள் தேர்தல் ஆணையத்தால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 100 சதவீதம் வாக்காளர்களை ஓட்டுப்போட வைக்க வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கான பூத் சிலிப் (வாக்குச்சாவடி சீட்டு) வழங்கும் பணி கடந்த 26-ந்தேதி தொடங்கியது. 237 வாக்குச்சாவடிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று பூத் சிலிப் வழங்கி வருகிறார்கள். பூத் சிலிப்பில் வாக்காளர்கள் ஓட்டுபோட வேண்டிய வாக்குச்சாவடி விவரம், அமைவிட பகுதி என அனைத்து விவரங்களும் உள்ளன.

### 1 லட்சத்து 44 ஆயிரம் பேர்

பூத் சிலிப் வழங்கும் பணியில் 237 வாக்குச்சாவ்டி நிலை அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் இறுதியாக வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர்.. வாக்குச்சாவடி விவரங்களுடன் கூடிய பூத் சிலிப் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரடியாக வழங்கும் பணி கடந்த 26-ந்தேதி தொடங்கி, வழங்கப்பட்டு வருகிறது. இதில், நேற்று முன்தினம் வரை மொத்தம் 1லட்சத்து 44 ஆயிரத்து 513பேருக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. நேற்றும் பூத் சிலிப் வழங்கப்பட்டது. இன்று (வெள்ளிக்கிழமை) பூத் சிலிப் வழங்க கடைசி நாளாகும்.

பூத்சிலிப்பெறாதவர்கள் தங்கள் பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
Distribution of booth slips ends today.
1.44 Lakhs booth slips were distributed so far.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு

# நுண்பார்வையாளர்களுக்கு பணி ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.31–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5–ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதைத்தொடர்ந்து வாக்குப்பதிவு அன்று ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள 237 வாக்குச்சாவடிகள் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிப்பதற்காக எல்.ஐ.சி., ரெயில்வே அலுவலர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கி அலுவலர்கள் மற்றும் மத்திய அரசு பணியாளர்கள் என 284 பேர் தேர்தல் நுண்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கணினி சுழற்சி முறையில் முதல்நிலை பணி ஒதுக்கீடு, ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடந்தது. இதில் தேர்தல் பொதுபார்வையாளர் அஜய் குமார் குப்தா, மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா ஆகியோர் கலந்து கொண்டு பணி ஒதுக்கீடு செய்தனர். தேர்தல் நுண்பார்வையாளர்களுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான ஸ்ரீகாந்த், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராஜ்குமார், தேர்தல் தாசில்தார் சிவசங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
Election duty allotted to 'Election Micro Observers'.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025

100 சதவித வாக்குப்பதிவை வலியுறுத்தி

# மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்

## கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தொடங்கி வைத்தார்

ஈரோடு, ஜன.31–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன்படி, 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்கா ளர்களாக பதிவு செய்ய வேண்டும், வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று ஈரோட்டில் நடந்தது. இந்த ஊர்வலத்தை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இதில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகள், இடைத்தேர்தலில் 100 வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் தேர் தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் வைத்திருந்தனர். ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கிய ஊர்வலம், பெருந்துறை ரோடு வழியாக சென்று செங்கோடம்பள்ளத் தில் நிறைவுபெற்றது. இதில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியா ளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, மாவட்ட சமூகநல அதிகாரி சண்முகவடிவு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, ஈரோடு மாநகராட்சி 4–ம் மண்டல உதவி ஆணையாளர் லதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.


SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025

# பாதுகாப்பு பணியில் துணை ராணுவ வீரர்கள்



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இடைத்தேர்தல் தொடர்பான கட்டுப்பாட்டு அறைகள், தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகம், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறை ஆகியவை உள்ளன. இதனால் அலுவலகத்தின் நுழைவுவாயில் பகுதியில் நேற்று துப்பாக்கி ஏந்தி துணை ராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

Security duty by the paramilitary force.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 31 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

## டாஸ்மாக் கடைகளுக்கு 4 நாட்கள் விடுமுறை


ஈரோடு, ஜன.31-

ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வருகிற 3-ந்தேதி காலை 10 மணி முதல் வாக்குப்பதிவு நாளான வருகிற 5-ந்தேதி நள்ளிரவு 12 மணியும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான வருகிற 8-ந்தேதியும் மது விற்பனை இல்லாத நாளாக அனுசரிக்கவேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட 4 நாட்கள், ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் கடைகள், அதனுடன் இயங்கும் பார்கள் மற்றும் மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டு இருக்கும். மேற்கண்ட தினங்களில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது. அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
4 days holiday for TASMAC shops.

Scanned with OKEN Scanner

தினமலர் 3 1 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி துணை ராணுவப் படையினர் மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஈரோடு தேர்தல் பணிக்கு மேலும் 2 துணை ராணுவப்படை வருகை

## அதிகாரிகள் தகவல்

ஈரோடு, ஜன. 31-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் பாதுகாப்பு பணிக்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (துணை ராணுவத்தினர்) வர வழைக்கப் பட்டுள்ளனர்.

இந்த தேர்தலில் கிழக்கு தொகுதி மக்கள் வாக்களிக்க 53 இடங்களில், 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன. இதில், 9 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை யாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த நிலை யில், பாதுகாப்பு பணிக்காக கோவையை சேர்ந்த தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4-வது பட்டாலிய னைச் சேர்ந்த 160 போலீசார் கடந்த 15-ம் தேதி ஈரோடு வந்தனர். இவர்கள் உள்ளூர் போலீசாருடன் தேர்தல் சம்பந் தமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பாதுகாப்பு பணிக்கு 5 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வீரர்கள் வர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் தற்போது வரை 3 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வந்துள்ளனர். ஒரு கம்பெனியில் 90 துணை ராணுவத்தினர் உள்ளனர். 260 துணை ராணுவத்தினர் பல்வேறு தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின் றனர். மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று முதல் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோல் ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசாருடன் இந்த துணை ராணுவத்தினர் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் ஏற்கனவே ஈரோடு கிழக்கு தொகுதியில் பல்வேறு இடங்களில் துணை ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு நடத்தினர். மேலும் கிழக்கு தொகுதி தேர்தலில் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ள 9 வாக்கு சாவடி மையங்களில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்நிலையில் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக வரும் 2ம் தேதி மேலும் 2 துணை பாதுகாப்பு படையினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகை தர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Two more Additional Paramilitary Security Force arrived.

Scanned with OKEN Scanner

தினமலர் 3 1 JAN 2025

# ஈரோட்டில் ஒரே நாளில் ரூ.9 லட்சம் பறிமுதல்: தேர்தல் பறக்கும் படை அதிரடி

ஈரோடு, ஜன.31 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்களை வழங்குவதை தடுக்க பறக்கும் படை, நிலைக் கண்காணிப்பு குழு போன்றவை அமைக்கப்பட்டு தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று காலை ஈரோடு பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் தனபிரனேஷ் தலைமையிலான நிலைக்கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை நடத்தினர்.

இதில் காரில் ரூ.2 லட்சத்து 85 ஆயிரம் இருந்தது. காரை ஒட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தியதில் அவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளப்பட்டியை சேர்ந்த கட்டிட கான்ட்ராக்டர் முகமது சுகைல் என்பதும் அவரிடம் எடுத்து வந்த பணத்திற்கு ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது. இதையடுத்து பணத்தை பறிமுதல் செய்து மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இதே போல் நேற்று ஈரோடு சம்பத் நகர் கொங்கு கலையரங்கம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது காரில் ரூ.4 லட்சத்து 99 ஆயிரத்து 500 இருந்தது தெரிய வந்தது.



ஈரோடு சம்பத்நகரில் நடந்த வாகன சோதனையில் ஆவணங்களின்றி கொண்டுவரப்பட்ட ரூ.4 லட்சத்து 99 ஆயிரத்து 500ஐ பறக்கும்படை அதிகாரிகள் பறிமுதல் செய்து மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

காரில் வந்தவரிடம் நடத்திய விசாரணையில் அவர் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், ஜே.கே.கே. சுந்தரம் நகரை சேர்ந்த தினேஷ்குமார் என தெரிய வந்தது. அவரிடம் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் அதனை மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர். மேலும் நேற்று அதிகாலை 2 மணி அளவில் தேர்தல் பறக்கும் படையினர் ஈரேரடு ஈஸ்வரன் கோயில் வீதியில் அந்த வழியாக வந்த பைக்கை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் ரூ. 1.20 லட்சம் இருந்தது தெரிய வந்தது. பணத்திற்கு உரிய ஆவணம் இல்லாததால் அந்த பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் ரூ.9 லட்சத்து 5 ஆயிரத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
Flying squad seized the amount of Rs.9 Lakhs without proper documents.

Scanned with OKEN Scanner

**தினமலர்** 31 JAN 2025

### சட்டம் ஒழுங்கு பிரச்னையை தடுக்க

# ஈரோடு இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவன்று போலீஸ் அதிவிரைவு குழு அமைப்பு

ஈரோடு, ஜன. 31-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி (புதன்கிழமை) நடைபெற உள்ளது. இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு கூடுதல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், தேர்தல் வாக்குப்பதிவு தினத்தன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் தடுக்க போலீசார் அதிவிரைவு நடவடிக்கை குழு(க்யூ.ஆர்.டி) அமைக்கப்பட உள்ளது.

இதுகுறித்து மாவட்ட போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது:-

ஈரோடு இடைத்தேர்தல் நடக்கும் 237 வாக்குச்சாவடிகளிலும் ஒரு துணை ராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்திய நிலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். பதற்றமான வாக்குச்சாவடியில் ஒரு இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட உள்ளது. வாக்குச்சாவடி எல்லையான 100 மீட்டரில் ஒரு சப்- இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசாரும், 200 மீட்டர் தூரத்தில் ஒரு சப்- இன்ஸ்பெக்டர் தலைமையிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். இதுதவிர தேர்தலன்று சட்டம் ஒழுங்கு பிரச்னையை தடுக்க அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது. இக்குழுவினர் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அங்கு உடனடியாக விரைந்து சென்று, பிரச்சனைக்கு காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

மேலும், ஏ.டி.எஸ்.பி.க்கள் தலைமையிலான அதிவிரைவுப்படை போலீசாரும், டி.எஸ்.பி.க்கள் தலைமையிலான இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய போலீசார் குழுவினரும் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வாகன ரோந்து பணியில் ஈடுபடுவர். தற்போது, வாக்குச்சாவடியில் பணியாற்ற போலீசார், அதிவிரைவு நடவடிக்கை குழு போலீசார் ஒதுக்குவது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

Rapid Police Force formed to prevent law and order problems on Erode By-election polling day.

Scanned with OKEN Scanner

தினமலர் 31 JAN 2025

# ஈரோடு இடைத்தேர்தல் அன்று தனியார், பொது நிறுவனங்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை

## தொழிலாளர்துறை உத்தரவு

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைபெறும் பிப்ரவரி 5ம் தேதி அன்று தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் சம்பளத்துடன் கூடிய கட்டாய விடுமுறை அளிக்க வேண்டும் என தொழிலாளர் துறை அறிவித்துள்ளது.

சென்னை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த், ஈரோடு கலெக்டர் ராஜகோபால் சுன்கரா உத்தரவின்படி, கோவை கூடுதல் தொழிலாளர் ஆணையர் சாந்தி, ஈரோடு தொழிலாளர் இணை ஆணையர் மாதவன் ஆகியோர் அறிவுரையின்படி. ஈரோடு மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுதையொட்டி. அன்று ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் 100 சதவீத வாக்குப் பதிவினை உறுதி செய்ய ஏதுவாக, ஈரோடு மாவட்டத்தில் பணிபுரியும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள அனைத்து பணியாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும். அதனடிப்படையில் ஈரோடு மாவட்டத்தில் இயங்கும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களில் பணி புரியும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள தினக்கூலி, தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து பணியாளர்களுக்கும் தேர்தல் தினத்தன்று சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும்.

பிப். 5ம் தேதி (புதன்) தேர்தல் தினத்தன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்காத தொழில் நிறுவனங்கள் மீதான புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இது பற்றிய புகார்கள் இருந்தால் ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி (9445398751), தொழிலாளர் துணை ஆய்வாளர் முதல் சரகம், மனோரஞ்சிதம் (7708102209), தொழிலாளர் துணை ஆய்வாளர் இரண்டாம் சரகம், மயில்வாகன் (9840456912), தொழிலாளர் உதவி ஆய்வாளர் முதல் சரகம், யுவராஜ் (9543826001), தொழிலாளர் உதவி ஆய்வாளர் இரண்டாம் சரகம், பெரோஸ் அகமது (9965634839), தொழிலாளர் உதவி ஆய்வாளர் மூன்றாம் சரகம், சுகந்தி (9442400223), தொழிலாளர் உதவி ஆய்வாளர் நான்காம் சரகம், ராஜ்குமார் ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

மேலும் 0424- 2270090 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டும் புகார்களை தெரிவிக்கலாம்.

இந்த தகவலை ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
Private and public sector should declare holiday with salary on polling day. Labour Department orders.

Scanned with OKEN Scanner

தினமலர்
3 1 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# 1.50 லட்சம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகம்

ஈரோடு, ஜன.31 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வரும் 5ம் தேதி நடைபெறு கிறது. இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. தேர்தலில் 100 சதவீதம் வாக்கு பதிவை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர் கள் உள்ளனர். இவர்களுக்கு வீடு வீடாக சென்று பூத்சிலிப் வழங்கும் பணி கடந்த 26ம் தேதி தொடங்கியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 26 ம் தேதி 40 ஆயிரத்து 429 வாக்காளர்களுக்கும், 27ம் தேதி 34 ஆயிரத்து 859 வாக்காளர்களுக்கும், 28ம் தேதி 32 ஆயிரத்து 79 வாக்காளர்களுக்கும், 29ம் தேதி 37 ஆயிரத்து 146 வாக்காளர்களுக்கும் பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் இதுவரை 1 லட்சத்து 44 ஆயிரத்து 513 வாக்காளர்களுக்கு பூத்சிலிப் விநியோகம் செய்யப்பட்டுள் ளது. மீதமுள்ள 83 ஆயிரத்து 33 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
1.50 Lakhs booth slips were distributed to the voters.

Scanned with OKEN Scanner

தினமலர் 31 JAN 2025

ஈரோடு இடைத்தேர்தல்

# ஓட்டு எண்ணும் பணியில் 51 அலுவலர்கள் நியமனம்

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான முதல் நிலை பணி ஒதுக்கீடு தேர்தல் கமிஷன் வெப்சைட்டில் கம்ப்யூட்டர் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

இதன்படி வரும் 8ம் தேதி (சனி) சித்தோடு அரசு இன்ஜி. (ஐ.ஆர்.டி.டி) கல்லூரியில் ஓட்டு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 14 மேசைகளில் ஓட்டு எண்ணப்படுகிறது. இப்பணிக்கு 20 சதவீதம் ரிசர்வ் உட்பட 17 ஓட்டு எண்ணும் மேசை கண்காணிப்பாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண் பார்வையாளர்கள் என 51 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்ச்சியின்போது ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஈரோடு மாநகராட்சி கமிஷனர் ஸ்ரீகாந்த், உதவி கலெக்டர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, தேர்தல் தாசில்தார் சிவசங்கர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
51 Officials appointed for counting duty.

Scanned with OKEN Scanner

தினமலர் 31 JAN 2025



ஈரோடு இடைத்தேர்தலில் பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கு தேர்தல் கமிஷன் வெப்சைட்டில் கம்ப்யூட்டர் சுழற்சி முறையில் முதல் நிலை பணி ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

# ஈரோட்டில் பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிக்க 284 தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கு பணி ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடை பெறுகிறது.

அதன்படி தேர்தல் நன்னடத்தை விதிகளை கண்காணிக்கும் பொருட்டு பறக்கும் படை குழுக்கள், நிலை கண்காணிப்பு குழுக்கள் நியமிக்கப் பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து 237 வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு நாள் அன்று பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணித்தல் உட்பட்ட பணிகளை கண்காணிக்க எல்ஐசி, ரயில்வே அலுவலர்கள், தேசியமயமாக்கப்பட்ட பேங்க் அலுவலர்கள் மற்றும் இதர மத்திய அரசு பணியாளர்கள் என( 20 சதவீதம் ரிசர்வ் 47 நபர்கள் உட்பட ) 284 தேர்தல் நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நேற்று தேர்தல் பொது பார்வையாளர் அஜய் குமார் குப்தா முன்னிலையில், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, கம்ப்யூட்டர் சுழற்சி முறையில் முதல் நிலை பணி ஒதுக்கீடு செய்தார்.

இவர்களுக்கு (இன்று) 31ம் தேதி பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. நிகழ்ச்சியில் ஈரோடு தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஈரோடு மாநகராட்சி கமிஷனர் ஸ்ரீகாந்த், ஈரோடு கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரத்துல்லா, மாவட்ட முன்னோடி பேங்க் மேலாளர் ராஜ்குமார், தாசில்தார் (தேர்தல்) சிவசங்கர் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Election duty allotted to 284 Micro Observers to monitor the vulnerable booths in Erode.

Scanned with OKEN Scanner

தினமலர் 3 1 JAN 2025



ஈரோடு கிழக்குத் தொகுதியில் 100 சதவீதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு வாகன பேரணியை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா துவக்கி வைத்தார்.

# 100 சதவீதம் வாக்களிப்பை வலியுறுத்தி மாற்றுத்திறன்ாளிகள் விழிப்புணர்வு பேரணி

ஈரோடு, ஜன.31-

ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பேரணி கலெக்டர் அலுவலக வளாகத்தில் துவங்கி பரிமளம் மஹால் வரை சென்றது. இதில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஏற்படுத்திச் சென்றனர். நிகழ்ச்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரத்துல்லா, மாவட்ட சமூக நல அலுவலர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சண்முகவடிவு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, உதவி ஆணையர் (மண்டலம் 4) லதா மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தினமலர் 31 JAN 2025

# ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் டாஸ்மாக் கடைகளுக்கு 4 நாள் விடுமுறை

ஈரோடு, ஜன.31-

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு 3ம் தேதி (திங்கள்) காலை 10 மணி முதல் வாக்குப்பதிவு நடைபெறும் நாளான 5ம் தேதி (புதன்) வரை மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 8ம் தேதி (சனி) ஆகிய நாட்களில் மது விற்பனை இல்லாத நாளாக அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி 3ம் தேதி முதல் 5ம் தேதி வரை மற்றும் 8ம் தேதி ஆகிய தினங்கள் முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து FL2, FL3, FL4(A), FL7 ஆகிய உரிமம் பெற்ற கடைகள் மற்றும் அனைத்து டாஸ்மாக் கடைகள் அவற்றுடன் இணைந்த பார்கள் ஆகியவை மூடப்பட்டிருக்கும்.

இந்த தினங்களில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது. அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
4 days holiday for TASMAC shops.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025

## ஈரோட்டில் ஒரே நாளில்

# 3 பேரிடம் ரூ.9.04 லட்சம் பறிமுதல்

**பறக்கும் படை அதிரடி**

ஈரோடு,ஜன.31: ஈரோட்டில் ஒரே நாளில் பறக்கும் படை மற்றும் நிலைக்கண் காணிப்பு குழு சோதனையில் ஆவணங்களின்றி எடுத்து வந்ததாக கட்டிட கான்ட்ராக்டர் உட்பட 3 பேரிடம் ரூ.9.04 லட்சம் ரொக்கத்தை பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு சட்ட மன்றதொகுதி இடைத்தேர் தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதனையொட்டி, வாக்கா ளர்களுக்கு பணம்,பரிசு பொருட்களை வழங்கு வதை தடுக்க 3 பறக்கும் படை, 3 நிலைக்கண்கா ணிப்பு குழு போன்றவை அமைக்கப்பட்டு தீவிர வாகன தணிக்கை மேற் கொண்டு, ரூ.50 ஆயிரத் திற்கு மேல் ஆவணங்க ளின்றி கொண்டு வரும் ரொக்கம் மற்றும் பரிசு பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர்.

ஈரோடு பி.பெ.அக்ர ஹாரம் பகுதியில் தனபிர வேஷ் தலைமையிலான நிலைக்கண் காணிப்பு குழுவினர் நேற்று காலை வாகன தணிக்கை மேற் கொண்டிருந்தனர்.அப் போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை நடத்தினர். காரில் ரூ.2 லட் சத்து 85 ஆயிரம் ரொக்கம் இருந்தது. இது குறித்த விசா ரணை நடத்தியதில், காரில் வந்தவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளப் பட்டியை சேர்ந்த கட்டிட கான்ட்ராக்டரான முகமது சுகைல் என்பதும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது.

இதையடுத்து பணத்தை நிலைக்கண்காணிப்பு குழு வினர் பறிமுதல் செய்து, மாநகராட்சி தேர்தல் கட் டுப்பாட்டு பிரிவு அலுவல கத்தில் ஒப்படைத்தனர்.

ஈரோடு சம்பத் நகர் பகு தியில் சண்முகம் தலைமை யிலான பறக்கும் படையி னர் நேற்று காலை வாகன தணிக்கை மேற்கொண் டிருந்தனர். அப்போது, அவ்வழியாக வந்த காரை சோதனை செய்தபோது, காரில் ரூ.4 லட்சத்து 99 ஆயிரத்து 500 ரொக்கம் இருந்தது.

காரை ஓட்டி வந்த நபரி டம் விசாரணை நடத்திய தில் அந்த நபர் நாமக்கல் மாவட்டம் குமாரபாளை யம் ஆனங்கூரை சேர்ந்த தினேஷ்குமார் என்பதும், அவர் எடுத்து வந்த பணத் திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது. இதையடுத்து பணத்தை பறி முதல் செய்தனர்.

ஈரோடு ஈஸ்வரன் கோவில் வீதியில் நேற்று அதிகாலை வாகன தணிக்கை மேற்கொண்ட போது, பைக்கில் வந்த நபரிடம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் உரிய ஆவணங் கள் இன்றி எடுத்து வந்த தால், அந்த பணத்தையும் பறிமுதல் செய்து தேர்தல் பிரிவு கட்டுப்பாட்டு அதி காரியிடம் ஒப்படைத்தனர். ஈரோட்டில் ஒரே நாளில் 3 பேரிடம் ரூ. 9 லட்சத்து 4 ஆயிரத்து 500 ரொக்கம் பறி முதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



▶ ஈரோடு பி.பெ.அக்ரஹாரத்தில் காரில் ஆவணங்களின்றி கட்டிட கான்ட்ராக்டர் எடுத்து வந்த ரூ.2.85 லட்சத்தை தேர்தல் நிலைக்கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து தேர்தல் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.



▶ ஈரோடு பி.பெ. அக்ரஹாரம் அருகே வியாபாரியிடம் பணம் பறிமுதலானது. பின்னர் பணம் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

Erode East Assembly Constituency By-election.
Flying squad seized the amount of Rs.9 Lakhs without proper documents from 3 persons in a single day in Erode.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025

## தேர்தல் விதிமுறைகளை மீறியதாக அரசியல் கட்சியினர் மீது 18 வழக்குகள் பதிவு

ஈரோடு,ஜன.31: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு இன்னும் 6 நாட்களே இருப்பதால் அரசியல் கட்சியினர் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு பிரசாரம் செய்யும்போது அரசியல் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறுகின்றனரா? என கண்காணித்து போலீசார் வழக்குப்பதிவு செய்த, நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கொடி கம்பங்கள், முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துபவர்கள், அனுமதிக்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலாக பிரசாரம் செய்தவர்கள், வாக்கு கேட்டு விளம்பர பதாகைகளை வைத்து தேர்தல் விதிகளை மீறியதாக நாதக மற்றும் திமுக உள்ளிட்ட அரசியல் கட்சியினர் மீது இதுவரை 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

18 cases filed on the violation of ECC on political party people.

Scanned with OKEN Scanner

தினகரன்
3 1 JAN 2025

## கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி நிறைவு

ஈரோடு,ஜன.31: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி நடைபெற்று வந்த வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி நிறைவடைந்தது.

ஈரோடுகிழக்குதொகுதி இடைத்தேர்தலில் திமுக, நாதக மற்றும் சுயேட்சைகள் என 46 வேட்பாளர்கள்போட்டியிடுகின்றனர். வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில், 237 வாக்குச் சாவடிகளிலும், 20 சதவீதம் கூடுதல் வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்துமொத்தம் 852 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவி பேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இத்தேர்தலையொட்டி, கடந்த 20-ம் தேதி வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொருத்துவதற்காக, வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட 'பேலட் ஷீட்'களை அச்சிடும் பணி சென்னையில் நடைபெற்றது.


அதனைத்தொடர்ந்து, 852 வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள 'பேலட் ஷீட்'கள் பொருத்தும் பணி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் காலை தொடங்கியது. இதில், இப்பணியைப் பார்வையிட வேட்பாளர்கள்,முகவர்கள் சோதனைக்குப் பின் அனுமதிக்கப்பட்டனர். ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும் என்ற நிலையில், 46 வேட்பாளர்கள் மற்றும் நோட்டா என மொத்தம் 47 பேர் களத்தில் உள்ளதால், ஒரு வாக்குச்சாவடிக்கு 3 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்நிலையில், கடந்த 2 நாட்களாக நடைபெற்று வந்த வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

தேர்தலுக்கு ஒரு நாளுக்கு முன்பாக, பலத்த போலீஸ் பாதுகாப்புடன், எந்தவாக்குப்பதிவு எந்திரம் எந்த இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில் கொண்டு செல்லப்படும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பளத்துடன் கூடிய விடுமுறை: ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் நாளன்று (பிப்ரவரி 5ம் தேதி) நடைபெறவுள்ளது. அன்றைய தினம், 100 சதவீதம் வாக்குப் பதிவை உறுதி செய்ய, ஈரோடு மாவட்டத்தில் அனைத்து வகை தொழில் நிறுவனங்களில் பணியாற்றும், கிழக்குத் தொகுதியில் வாக்காளராக பதிவு செய்துள்ள பணியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையளிக்கவேண்டும் என தொழிலாளர் துறை ஆணையர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், அன்றைய தினம் விடுமுறையளிக்காத நிறுவனங்கள் குறித்து புகார் தெரிவிக்க ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி - 9445398751, தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் மனோரஞ்சிதம் - 7708102209, மயில்வாகனன் - 9840456912 மற்றும் அலுவலக தொலைபேசி எண் 0424-2270090 ஆகியவற்றில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.



▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை யொட்டி மின்னணு வாக்கு பதிவு எந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி நேற்று 2-வது நாளாக நடந்தது.

## தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கு முதல் நிலை பணி ஒதுக்கீடு

ஈரோடு கிழக்குத் தொகுதியில் பதட்டமான வாக்குச் சாவடிகளை கண்காணிக்க நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்குத் தொகுதியில் உள்ள 237 வாக்குச் சாவடிகளுக்கும் 237 பேர், 20% கூடுதலாக 47 பேர் என மொத்தம் 284 நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, தேர்தல் பொதுப் பார்வையாளர் அஜய்குமார் குப்தா முன்னிலையில், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகொபால் சுன்கரா நேற்று கணினி சுழற்சி முறையில் முதல் நிலை பணி ஒதுக்கீடு செய்தார்.

தொடர்ந்து, பணி ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு இன்று (31ம் தேதி) பயிற்சி அளிக்கப்படுகிறது.நிகழ்வில் கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், தேர்தல் வட்டாட்சியர் சிவசங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## புதிதாக 1,113 வாக்காளர்கள் சேர்ப்பு

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி கடந்த 6ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அன்றைய தினம் ஈரோடு கிழக்கு தொகுதியில் ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 9 ஆயிரத்து 636 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 16 ஆயிரத்து 760 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 வாக்காளர்கள் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த 7ம் தேதி அறிவிக்கப்பட்டதால், அன்றைய தினம் வரை புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், 1,113 பேர் புதிய வாக்காளர்களாக ஈரோடு கிழக்கு தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஈரோடு கிழக்கு தொகுதியில் தற்போது ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 பேர் உள்ளனர். இத்தகவலை ஈரோடு மாவட்ட தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Fixing of Symbols and Candidates' name in EVMs ends.
1,113 new voters added.
1st Phase duty allotted to the micro observers.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025

## வாக்காளர்களுக்கான பூத் சிலிப் வழங்கும் பணி இன்றுடன் நிறைவு

ஈரோடு,ஜன.31: ஈரோடு இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கான பூத் சிலிப் வழங்கும் பணி இன்றுடன் (31ம் தேதி) நிறைவு பெற உள்ளது. இதுவரை 1.44 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் ஆண், பெண் வாக்காளர்கள் என 2 லட்சத்து 27ஆயிரத்து 546 பேர் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, வாக்குச்சாவடி விவரங்களுடன் கூடிய பூத் சிலிப் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரடியாக வழங்கும் பணி கடந்த 26ம் தேதி தொடங்கி, வழங்கப்பட்டு வருகிறது.

இதில், கிழக்கு தொகுதியில் நேற்று முன்தினம் வரை 1 லட்சத்து 44 ஆயிரத்து 513 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 83 ஆயிரத்து 33 வாக்காளர்களுக்கு தொடர்ந்து வழங்கும் பணி நடந்து வருகிறது.

இந்த பணி இன்றுடன் (31ம் தேதி) நிறைவு பெற உள்ளது.

Distribution of booth slips to the voters ends today.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# மண்டல அலுவலர்களுக்கு இன்று வாகனங்கள் ஒதுக்கீடு

ஈரோடு,ஜன.31: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, மண்டல அலுவலர்களுக்கு இன்று வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலின் வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி நடக்கிறது. தொகுதியில் தேர்தல் பணியாற்றி 24 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மண்டல அலுவலர்களுக்கு குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணிகளை கண்காணிக்க பணி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று வருவதற்கு, இன்று (31ம் தேதி) வாகனங்கள் ஒதுக்கப்படுகிறது.

இது குறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், கிழக்கு தொகுதியில் 24 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டு,பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்குப்பதிவிற்கு முந்தைய நாளான பிப்ரவரி 4ம்தேதி, வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பாதுகாப்பு அறையிலிருந்து போலீஸ் பாதுகாப்புடன் வாக்குச்சாவடி மையங்களுக்கு எடுத்துச் செல்வது முதல், வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டு, தேர்தல் முடிவுற்றவுடன் வாக்குப்பதிவு இயந்திரத்தினை பாதுகாப்பாக வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச் சென்று ஒப்படைப்பது வரை அனைத்து பணிகளையும் மண்டல அலுவலர்கள் கண்காணிக்க உள்ளனர். இதற்காக, மண்டல அலுவலர்களுக்கு இன்று வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இந்த வாகனங்களில், ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்டு சரிபார்க்கப்படும். இவ்வாறு தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Vehicles allotted to the Zonal Officers.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025

# 100 சதவீதம் வாக்களிக்க கோரி விழிப்புணர்வு வாகன பேரணி

ஈரோடு,ஜன.31: ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இந்த தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்ய பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் நேற்று இடைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்ககோரி மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு வாகன பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



ஈரோடு கிழக்கு தொகுதியில் 100 சதவீத வாக்குப்பதிவினை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு வாகன பேரணி நேற்று நடைபெற்றது.

பேரணியானது ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் துவங்கி, பெருந்துறை சாலை வழியாக குமலன் குட்டை, பழையபாளையம், செங்கோடம்பள்ளத்தில் உள்ள மண்டபத்தில் நிறைவடைந்தது.

இதில், பங்கேற்ற மாற்றுத்திறனாளிகள் இடைத்தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தும் வகையில் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த பேரணியில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் முகமது குதுரத்துல்லா, சமூக நல அலுவலர் சண்முகவடிவு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, மாநகராட்சி 4ம் மண்டல உதவி ஆணையர் லதா மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தினகரன் 31 JAN 2025



▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர் தலை யொட்டி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி நேற்று 2-வது நாளாக நடந்தது. சின்னங்கள் பொருத்தப்பட்ட இயந்திரங்கள் பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல் லப்படுகிறது.

EVMs are kept in the strong room.

Scanned with OKEN Scanner

தினமணி

31 JAN 2025

# 100 % வாக்குப் பதிவை வலியுறுத்தி மாற்றுத் திறனாளிகள் விழிப்புணர்வுப் பேரணி




பேரணியை கொடியசைத்து தொடங்கிவைக்கிறார் மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா.

ஈரோடு, ஜன.30: 100 சதவீத வாக்குப் பதிவை வலியுறுத்தி ஈரோட்டில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டும், வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வுப் பேரணி ஈரோட்டில் நடைபெற்றது.

இப்பேரணியை மாவட்ட தேர்தல் அதிகாரியும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து தொடங்கிவைத்தார். இதில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள், இடைத்தேர்தலில் 100 சதவீத வாக்குப் பதிவினை வலியுறுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்திச் சென்றனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி பெருந்துறை சாலை வழியாக சென்று செங்கோடம்பள்ளத்தில் முடிவடைந்தது.

இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, மாவட்ட சமூகநல அலுவலர் சண்முகவடிவு, மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பூபதி, மாநகராட்சி உதவி ஆணையாளர் லதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தினமணி 31 JAN 2025

வாக்குப்பதிவு நாளில் தொழிலாளர்களுக்கு

# ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க அறிவுறுத்தல்

ஈரோடு, ஜன.30: ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப் பதிவு நாளில் தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என தொழிலாளர் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஈரோடு மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) கோ.ஜெயலட்சுமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத் தேர்தல் பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, ஈரோடு கிழக்கு சட்டப் பேரவை தொகுதிக்கு உள்பட்ட பகுதிகளுக்கு அன்றைய தினம் பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் 100 சதவீத வாக்குப் பதிவினை உறுதி செய்ய ஏதுவாக மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவின் கீழ் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில், ஈரோடு மாவட்டத்தில் இயங்கும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள தினக்கூலி, தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்பட அனைத்துப் பணியாளர்களும் தேர்தல் தினத்தன்று வாக்குரிமையை செலுத்திட ஊதியத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும்.

ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்காத தொழில் நிறுவனங்கள் மீதான புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையின் கீழ் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய தொழில் நிறுவனங்களில் விடுமுறை அளித்தல் தொடர்பான புகார்கள் இருந்தால் தெரிவிக்கலாம்.

**அலுவலர்களின் பெயர், கைப்பேசி எண் விவரம்:** ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கோ.ஜெயலட்சுமி- 9445398751, தொழிலாளர் துணை ஆய்வாளர் முதல் சரகம் மனோரஞ்சிதம்- 7708102209, தொழிலாளர் துணை ஆய்வாளர் 2-ஆம் சரகம் மயில்வாகனன்- 9840456912, தொழிலாளர் உதவி ஆய்வாளர் முதல் சரகம் யுவராஜ்- 9543826001, தொழிலாளர் உதவி ஆய்வாளர் 2-ஆம் சரகம் ஃபெரோஸ் அகமது- 9965634839, தொழிலாளர் உதவி ஆய்வாளர் 3-ஆம் சரகம் சுகந்தி- 9442400223 மற்றும் தொழிலளார் உதவி ஆய்வாளர் 4-ஆம் சரகம் ராஜ்குமார்- 96982115097 ஆகியோரது எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

Erode East Assembly Constituency By-election.
Private and public sector should declare holiday with salary on polling day. Labour Department instructs.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

# இடைத்தேர்தல் விதிமீறலில் 18 வழக்கு பதிவு

ஈரோடு, ஜன. 31-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிரசாரத்தில், பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல் கட்சியினர், நடத்தை விதிகளை மீறுகின்றனரா? என பறக்கும் படையினர் கண்காணித்து அளிக்கும் புகாரின் படி, போலீசார் வழக்கு பதிவு செய்கின்றனர்.

இந்த வகையில் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கொடி கம்பங்கள், முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துபவர்கள், அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதலாக பிரசாரம் செய்தவர்கள், வாக்கு கேட்டு விளம்பர பதாகைகளை வைத்து விதி மீறியதாக, நா.த.க., மற்றும் தி.மு.க., உள்ளிட்ட அரசியல் கட்சியினர் மீது இது வரை, 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

18 Cases filed for the violation of ECC.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

# ரூ.10.92 லட்சம் பறிமுதல்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பறக்கும் படையினர் நேற்று முன்தினம் இரவில், அரசு மருத்துவமனை ரவுண்டானாவில் வாகன தணிக்கை செய்தனர். மகேந்திரா காரில் வந்த ஈரோட்டை சேர்ந்த பாண்டி என்பவரிடம், 1.88 லட்சம் ரூபாய் ஆவணமின்றி இருந்தது தெரியவந்தது. பறக்கும் படை அதிகாரி தினகரன் தலைமையிலானவர்கள் பணத்தை பறிமுதல் செய்தனர்.

ஈரோடு, பி.பி.அக்ரஹாரத்தில் பறக்கும் படை அதிகாரி தனபிரனேஷ் தலைமையில் நேற்று காலை வாகன தணிக்கை செய்தனர். கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளிப்பட்டி ஷா நகரை சேர்ந்த கட்டட ஒப்பந்ததாரர் முகம்மது சுகைல், மாருதி இகோ காரில் வந்தார். ஆவணமின்றி கொண்டு வந்த, 2.85 லட்சம் ரூபாயை பறிமுதல் செய்தனர். இதேபோல் ஈரோடு சம்பத் நகரில் பறக்கும் படை அதிகாரி சண்முகம் தலைமையில், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில், ஜவுளி வியாபாரி தினேஷ்குமாரிடம், 4.99 லட்சம் ரூபாய்; ஈரோடு, ஈஸ்வரன் கோவில் வீதியில், பறக்கும் படை அதிகாரி முருகானந்தம் தலைமையிலான குழுவினர், பைக்கில் வந்த நபரிடம் இருந்து, 1.20 லட்சம் ரூபாய் என, ஒரே நாளில், 10.92 லட்சம் ரூபாயை பறிமுதல் செய்தனர்.

Rs.10.92 Lakhs seized by the Flying Squad.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 3 1 JAN 2025

## 1.76 லட்சம் பேருக்கு 'பூத் சிலிப்' வழங்கல்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், 2 லட்சத்து, 27,546 வாக்காளர்கள் ஓட்டுப்பதிவு செய்ய உள்ளனர். இவர்களுக்கு கடந்த, 26ல் 'பூத் சிலிப்' வழங்கும் பணி துவங்கியது. நேற்று முன்தினம் வரை, 1 லட்சத்து, 44,513 வாக்காளர்களுக்கு வழங்கியுள்ளனர். மீதி, 83,033 வாக்காளர்களுக்கு இரண்டு நாளில் வழங்கி முடிக்க திட்டமிட்டனர். இதில் நேற்று மட்டும், 31,539 பேருக்கு வழங்கியதன் மூலம், ஒரு லட்சத்து, 76,052 வாக்காளர்களுக்கு 'பூத் சிலிப்' வழங்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
1.76 Lakhs booth slips were distributed to the voters.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

## மைக்ரோ அப்சர்வர் நியமனம்

இடைத்தேர்தலில், பதட்டமான ஓட்டுச்சாவடிகளை கண்காணிக்க, எல்.ஐ.சி., – ரயில்வே அலுவலர்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அலுவலர்கள், பிற மத்திய அரசு பணியாளர்கள் என, 284 தேர்தல் நுண் பார்வையாளர் (மைக்ரோ அப்சர்வர்) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேர்தல் பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா முன்னிலையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொகுதியில் உள்ள, 237 ஓட்டுச்சாவடிகளை கண்காணிக்க, 20 சதவீத கூடுதல் என, 47 பேர் உட்பட, 284 தேர்தல் நுண் பார்வையாளர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு முதல் நிலை பணி ஒதுக்கீடு, தேர்தல் ஆணைய கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

Micro Observers appointed.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

# 51 அலுவலர்கள் நியமனம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டு எண்ணிக்கை, சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் பிப்.,8ல் நடக்கவுள்ளது. இதற்கான பணியில் கண்காணிப்பாளர், உதவியாளர், . நுண் பார்வையாளர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர். தேர்தல் ஆணைய இணையதளம் மூலம் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்தனர். கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமை வகித்தார்.

ஓட்டு எண்ணும் பணியில், 14 மேஜைகளில் நடக்கும். இப்பணிக்கு கூடுதலாக, 20 சதவீதம் ரிசர்வ் மேஜைகள், அலுவலர்கள் சேர்த்து, 17 ஓட்டு எண்ணும் மேஜை கண்காணிப்பாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண் பார்வையாளர்கள் என, 51 அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

Erode East Assembly Constituency By-election.
51 Officials appointed for counting duty.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

## 1,113 வாக்காளர்கள் 'புதுசு'

ஈரோடு மாவட்டத்தில் எட்டு சட்டசபை தொகுதிக்கு, கடந்த, 6ல் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்போது ஈரோடு கிழக்கு தொகுதியில், 1 லட்சத்து, 9,636 ஆண் வாக்காளர், 1 லட்சத்து, 16,760 பெண் வாக்காளர்கள், 37 3ம் பாலினத்தவர்கள் என, 2 லட்சத்து, 26,433 வாக்காளர்கள் உள்ளதாக அறிவித்திருந்தனர். கடந்த, 7ல் தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அன்றைய தேதி வரை புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வழங்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், 1,113 பேர் சேர்க்கப்பட்டனர். இதனால் தொகுதியில், 1 லட்சத்து, 10,128 ஆண், 1 லட்சத்து, 17,381 பெண், மூன்றாம் பாலினத்தவர், 37 பேர் என, 2 லட்சத்து, 27,546 வாக்காளர்கள் தற்போது உள்ளனர்.

1,113 New voters in the electoral roll.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 3 1 JAN 2025

## 'பேலட் ஷீட்' ஒட்டும் பணி நிறைவு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவில் பயன்படுத்தப்படும் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் (இ.வி.எம்.,), 'பேலட் ஷீட்' ஒட்டும் பணி நேற்று முன்தினம் துவங்கியது. தொகுதியில் உள்ள, 237 ஓட்டுச்சாவடிகள் மற்றும் கூடுதலாக, 20 சதவீதம் சேர்த்து, 852 இ.வி.எம்.,கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரம், 308 விவிபேட் பயன்படுத்தப்படுகிறது. மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறையில் இருந்து எடுக்கப்பட்டு 'பேலட் ஷீட்' பொருத்தப்பட்டது. நேற்றிரவில் அனைத்து இ.வி.எம்.,களிலும் 'பேலட் ஷீட்' ஒட்டும் பணி முடிந்து அவற்றுக்கான பெட்டிகளில் வைக்கப்பட்டு பூட்டி 'சீல்' வைத்தனர்.

Fixing of Symbols and Candidates' name in EVMs ended.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

## சம்பளத்துடன் 'லீவு' தர உத்தரவு

ஈரோடு மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயலட்சுமி விடுத்த செய்திக்குறிப்பில் கூறியதாவது: கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவு பிப்., 5ல் ஓட்டுப்பதிவு நாளாகும். அந்நாள் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் ஓட்டளிக்க கிழக்கு தொகுதி வாக்காளர்களாக பதிவு செய்துள்ள அனைத்து வகை பணியாளர்களுக்கும் ஊதியத்துடன் விடுமுறை அளிக்கப்பட வேண்டும். சம்பளத்துடன் விடுப்பு வழங்காத நிறுவனங்கள் மீதான புகாரை, 94453 98751, 0424 2270090 போன்ற எண்களில் தெரிவிக்கலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
Private and public sector should declare holiday with salary on polling day. Labour Department orders.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

## 4 நாட்கள் டாஸ்மாக் 'லீவு'


இடைத்தேர்தலை ஒட்டி பிப்., 3ம் தேதி காலை, 10:00 மணி முதல் ஓட்டுப்பதிவு நடைபெறும் பிப்., 5ம் தேதி நள்ளிரவு, 12:00 மணி; ஓட்டு எண்ணிக்கை நடக்கும் பிப்., 8ல் மது விற்பனை இல்லாத நாளாக அனுசரிக்கப்படும். இதனால் இந்த நாட்களில் ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் அனைத்து எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.4(ஏ), எப்.எல்.7 ஆகிய உரிமத்தலங்கள், டாஸ்மாக் மதுபான கடைகள், அவற்றுடன் இணைந்த பார்கள் மூடப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
4 days holiday for TASMAC shops.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 31 JAN 2025

# பிரசார மேடையில் செருப்பை காட்டிய நா.த.க., கொள்கை பரப்பு செயலாளர்



ஈரோட்டில் இடைத்தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில், கையில் செருப்பை எடுத்துக் காட்டி பேசிய, நா.த.க., நிர்வாகி சாட்டை துரைமுருகன்.

**ஈரோடு, ஜன. 31–**


பிரசார பொதுகூட்டத்தில், நாம் தமிழர் கட்சி கொள்கை பரப்பு செயலாளர், செருப்பை எடுத்து காட்டி எச்சரித்தது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து, குமலன்குட்டையில் நேற்று முன்தினம் இரவு பொது கூட்டம் நடந்தது. இதில் அக்கட்சி கொள்கை பரப்பு செயலாளர் சாட்டை துரைமுருகன் பேசும் போது, "ஈ.வெ.ரா., இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் இருந்த, 60 பெண் புலவர்களை படிக்க வைத்தார். திருக்குறளை எழுதும் போது உடைந்த எழுத்தாணிக்கு பதில் புதிய எழுத்தாணியை கொடுத்து எழுத வைத்தார். தொல்காப்பியம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, அகநானூறு, புறநானூறு தந்தவர்களை உருவாக்கினார் என்று யாராவது கூறினால், பிஞ்ச செருப்பை எடுத்து அடிப்பேன்," என, பேசியபடியே, தனது ஒற்றை செருப்பை கழற்றி காட்டி, மேலும் பேச்சை தொடர்ந்தார். மேடையில் செருப்பை எடுத்து காட்டியதுடன், அடிப்பேன் என பேசும் வீடியோ வைரலாகி வருகிறது.

NTK Policy Propagation Secretory showed a sandal on the Campaigning Stage.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா 31 JAN 2025



ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ந் தேதி நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து வரும் 8ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இதில், தி.மு.க, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களது பெயர் பட்டியல் மற்றும் சின்னங்கள் கடந்த 20ம் தேதி ஒதுக்கீடு செய்து இறுதி செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, வாக்குப் பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட 'பேலட் ஷீட்'களை அச்சிடப்படும் பணிகளை தேர்தல் அலுவலர்கள் சென்னைக்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.

The Election Officer/Erode District Collector inspects the works regarding by-election.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா 3 1 JAN 2025



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் ஈரோடு கிழக்கு 98 சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் முன்னிட்டு 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர் 31 JAN 2025




ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் 100% சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.

SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

**தமிழ் சுடர்** 3 1 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பணிக்கு

# 2 துணை ராணுவப் படையினர் வர உள்ளனர்:அதிகாரிகள் தகவல்

ஈரோடு, ஜன.31

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் பாதுகாப்பு பணிக்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (துணை ராணுவத்தினர்) வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தேர்தலில் கிழக்கு தொகுதி மக்கள் வாக்களிக்க 53 இடங்களில், 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாதுகாப்பு பணிக்காக கோவையை சேர்ந்த தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4வது பட்டாலியனைச் சேர்ந்த 160 போலீசார் கடந்த 15ம் தேதி ஈரோடு வந்தனர். இவர்கள் உள்ளூர் போலீசாருடன் தேர்தல் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பாதுகாப்பு பணிக்கு 5 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வீரர்கள் வர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் தற்போது வரை 3 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வந்துள்ளனர். ஒரு கம்பெனியில் 90 துணை ராணுவத்தினர் உள்ளனர். 260 துணை ராணுவத்தினர் பல்வேறு தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாநகராட்சி அலுவலகத்தில் இன்று முதல் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதைப்போல் கிழக்கு பகுதி தேர்தலை ஒட்டி ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசார் உடன் இந்த துணை ராணுவத்தினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் ஏற்கனவே ஈரோடு கிழக்கு தொகுதியில் பல்வேறு இடங்களில் துணை ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு நடத்தினர்.

மேலும் கிழக்கு தொகுதி தேர்தலில் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ள 9 வாக்கு சாவடி மையங்களில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்நிலையில் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக வரும் 2ந் தேதி மேலும் 2 துணை பாதுகாப்பு படையினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகை தர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Two more Additional Paramilitary Security Force arrived.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர்    31 JAN 2025

# ஈரோட்டில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற ரூ.9 லட்சம் பறிமுதல்: பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன.31

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதனை யொட்டி, வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்களை வழங்குவதை தடுக்க பறக்கும் படை, நிலைக்கண்காணிப்பு குழு போன்றவை அமைக்கப்பட்டு தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று காலை ஈரோடு பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் தனபிரகாஷ் தலைமையிலான நிலைக்கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை நடத்தினர். இதில், காரில் ரூ.2 லட்சத்து 85 ஆயிரம் ரொக்கம் இருந்தது. இதுகுறித்து காரை ஓட்டி வந்தநபரிடம் விசாரணை நடத்தியதில், கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளப்பட்டியை சேர்ந்த கட்டிட காண்ட்ராக்டரான முகமது சுகைல் என்பதும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது. இதையடுத்து பணத்தை நிலைக்கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து, மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலகத்தில் ஒப்படைத்தனர். இதை போல் இன்று காலை ஈரோடு சம்பத் நகர், கொங்கு கலையரங்கம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.4 லட்சத்து 99 ஆயிரத்து 500 இருந்தது தெரிய வந்தது.

இது குறித்து காரில் வந்தவரிடம் விசாரணை நடத்திய போது அவர் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், ஜே.கே.கே. சுந்தரம் நகரை சேர்ந்த தினேஷ்குமார் என தெரியவந்தது அவரிடம் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படை அதிகாரிகள் அதனை மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர். இதைப்போல் நேற்று அதிகாலை 2 மணி அளவில் தேர்தல் பறக்கும் படையினர் ஈரோடு ஈஸ்வரன் கோவில் வீதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் ரூ.1.20 லட்சம் பணம் இருந்தது தெரியவந்தது. பணத்திற்கு உரிய ஆவணம் இல்லாததால் அந்த பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் ரூ.9 லட்சத்து 5 ஆயிரத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

Rs.9 Lakhs without proper documents seized by the Flying squad in Erode.

Scanned with OKEN Scanner

தின சூரியன் 31 JAN 2025

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வாகன விழிப்புணர்வு பேரணி



ஈரோடு, ஜன.31

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் 98 ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் முன்னிட்டு 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025 ஐ முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர், ஈரோடு மாவட்ட கலெக்டர் 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டும், வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்தார். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியரகத்தில் துவங்கி பரிமளம் மஹால் வரை சென்றது. இப்பேரணியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் 100 வாக்குப்பதிவினை வலியுறுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வினை ஏற்படுத்திச் சென்றனர்.


இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, மாவட்ட சமூக நல அலுவலர் ஒருங்கிணைப்பாளர் சண்முகவடிவு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் புபதி, உதவி ஆணையர் (மண்டலம் 4) லதா உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

SVEEP ACTIVITY

The Election Officer/Erode District Collector flags off an awareness rally of Physically Challenged People to emphasis 100% polling turnout.

Scanned with OKEN Scanner

மாலை மலர்    30 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி இன்று 2–வது நாளாக வேட்பாளர்கள் பெயர், சின்னங்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருவதை படத்தில் காணலாம்.

## ஈரோடு இடைத்தேர்தல் வாக்குப்பதிவன்று

# சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தடுக்க போலீஸ் அதிவிரைவு குழு அமைப்பு

ஈரோடு, ஜன. 30–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5–ந் தேதி (புதன்கிழமை) நடைபெற உள்ளது. இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதில்9வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு கூடுதல் க்ண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தேர்தல் வாக்குப்பதிவு தினத்தன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் தடுக்க போலீசார் அதிவிரைவு நடவடிக்கை குழு (க்யூ.ஆர்.டி) அமைக்கப்பட உள்ளது.

இதுகுறித்து மாவட்ட போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது:–

ஈரோடு இடைத்தேர்தல் நடக்கும் 237 வாக்குச்சாவடிகளிலும் ஒரு துணை ராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்திய நிலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர்.

பதற்றமான வாக்குச்சாவடியில் ஒரு இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட உள்ளது. வாக்குச்சாவடி எல்லையான 100 மீட்டரில் ஒரு சப்–இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசாரும், 200 மீட்டர் தூரத்தில் ஒரு சப்– இன்ஸ்பெக்டர் தலைமையிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர்.

இதுதவிர தேர்தலன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தடுக்க அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது. இக்குழுவினர் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அங்கு உடனடியாக விரைந்து சென்று, பிரச்சனைக்கு காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

மேலும் ஏ.டி.எஸ்.பி.க்கள் தலைமையிலான அதிவிரைவுப்படை போலீசாரும், டி.எஸ்.பி.க்கள் தலைமையிலான இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய போலீசார் குழுவினரும் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வாகன ரோந்து பணியில் ஈடுபடுவர்.


தற்போது வாக்குச்சாவடியில் பணியாற்ற போலீசார், அதிவிரைவு நடவடிக்கை குழு போலீசார் ஒதுக்குவது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Rapid Police Force formed to prevent law and order problems on Erode By-election polling day.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 30 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி பாதுகாப்பு பணிக்கு வந்துள்ள துணை ராணுவப்படையினர் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

### ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பணிக்காக

# மேலும் 2 துணை ராணுவப்படையினர் வருகை தர உள்ளனர்

## அதிகாரிகள் தகவல்

ஈரோடு, ஜன. 30—

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5—ம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி தேர்தல் பாதுகாப்பு பணிக்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (துணை ராணுவத்தினர்) வரவழைக்கப்பட்டுள்ளனர்.

**பதற்றமான வாக்குசாவடிகள்**

இந்த தேர்தலில் கிழக்கு தொகுதி மக்கள் வாக்களிக்க 53 இடங்களில், 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாதுகாப்பு பணிக்காக கோவையை சேர்ந்த தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4—வது பட்டாலியனைச் சேர்ந்த 160 போலீசார் கடந்த 15—ம் தேதி ஈரோடு வந்தனர். இவர்கள் உள்ளூர் போலீசாருடன் தேர்தல் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பாதுகாப்பு பணிக்கு 5 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வீரர்கள் வர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் தற்போது வரை 3 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வந்துள்ளனர்.

**தற்காலிக சோதனை சாவடிகள்**

ஒரு கம்பெனியில் 90 துணை ராணுவத்தினர் உள்ளனர். 260 துணை ராணுவத்தினர் பல்வேறு தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாநகராட்சி அலுவலகத்தில் இன்று முதல் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதேப்போல் கிழக்கு பகுதி தேர்தலை ஒட்டி ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசார் உடன் இந்த துணை ராணுவத்தினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

**கொடி அணிவகுப்பு**

பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் ஏற்கனவே ஈரோடு கிழக்கு தொகுதியில் பல்வேறு இடங்களில் துணை ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு நடத்தினர்.

மேலும் கிழக்கு தொகுதி தேர்தலில் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ள 9 வாக்கு சாவடி மையங்களில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்நிலையில் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக வரும் 2—ந் தேதி மேலும் 2 துணை பாதுகாப்பு படையினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகை தர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Two more paramilitary forces will arrive for Erode By-election duty.

Scanned with OKEN Scanner